


# ‘ஆத்ம ஞானம்’!

பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா





# “ஆத்ம ஞானம்”!



(ஸத்தியவாக்கை) ①

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.


"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

"ஸத்குரு திருவடி துணை!" "நம்பினோர் கெடுவதில்லை!"
"தெய்வம் மனுஷ்யா ரூபம்!" "யத் பாவம் தத் பவதி!"

**"ஸ்ரீராம், ஜெய ராம், ஜெய ஜெய ராம், ஓம்!"**

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!"
"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!"
"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"!
ஆலயம் தொழுவது சாலவும் நன்று!
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்!
கீழோர் ஆயினும் தாழ உரை!
அடங்கினால் உலகம் உன்னுள் அடங்கும்!
அடக்கினால் உலகம் உன்னை அடக்கிவிடும்!
இறைத்த கிணறு ஊறும்! மறுத்த கிணறு நாறும்!
தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்!
ஏழை அழுத கண்ணீர் கூரியவாள் ஒக்கும்!
கண்ணீருக்கு மிஞ்சிய காணிக்கை இல்லை!
அன்பினால் உலகை வெல்லலாம். அதிகாரத்தால் நாம் அழியலாம்!
விருப்பும் வெறுப்பும் அற்றிருப்பவனே ஞானி!
ஒன்றே ஸத்தியம்! அதுவே நாம்! நாமே அது!

த [signature] பாபா.




(1) **நாமரூப** பொன், பொருள்களோ, உறவு, சுற்றம், நட்பு, வகைகளோ, தோற்றத்தில் மயங்கிட, **எனது** என, சொந்தம் பாராட்டினவோ, அது **மன** வளர்ச்சி ஆகும். மேலே கூறியவைகள், **மன** மயமாகவும், அவை அனைத்தும், ஸ்ரீ பகவானுடைய **மாயா** ஆகவும், அனைத்தும், அவன் பொருளாகவும், அனைத்தும், அவன் இயக்கமாகவும், அனைத்து, **மனிதாலங்களின்** புண்ணிய பாவ, வினைக்கேற்ப, போக்கு வரவிலும், கொடுக்கல் வாங்கலிலும், பண்டப் பரிவர்த்தனம், செய்யப்படுகின்றன என்று, தெளிந்து உணர்ந்து, அவைகளை சஞ்சல பயம் இன்றி, பொறுமையுடன், ஏற்றுக் கொள்வது **ஞானம்** ஆகும்.



மனம் படைத்த மனித இனம் மட்டும் தம் மனதினால் வினைபரிமாற்றம் செய்து கொள்கின்றனர். மற்றும் அனைத்தும் தாம் ஏற்று வந்த வினையை மட்டும் அனுபவித்தும் அடுத்த ஜன்மா வுக்கு பழைய வினையை ஏற்றுக் கொள்கின்றன. (௩)

மனித இனத்திற்கு மட்டும் மனம் உண்டு.

(௨) மனித இனத்தையும் சேர்த்து, நடப்பன, ஊர்வன, பறப்பன, நீந்துவன, மற்றும் அனைத்து ஜீவ கோடிகளும், **புண்ணியபாப** சம்பந்தம், கொண்டிருந்தாலும், அவைகளில் **மனம்** இல்லாத தன்மையினால், **வினை** பரிமாற்றம், நடைபெறுவதில்லை. ஆனால் ஏற்று வந்த, வினை மட்டும், முடிவுறும். அவை மீண்டும், அவைகளின், மொத்த மூட்டை யாகிய, **சஞ்சித** மூட்டையி லிருந்து, அடுத்த ஜன்மா வுக்கு, வினைகளை, எடுத்து வந்து, திரும்ப திரும்ப, ஜனனமரணமும், வினை பரிமாற்றமும், செய்து கொள்வதையே, **விதி** என, பேசப்படுகிறது. ஆகவே இந்த மனதினாலேயே, வினைகளை **பெருக்க வும்**, வினைகளை, **அழிக்கவும்**, முடியும். இதற்கு, மனித ஜன்மா, ஒன்றுவேயே முடியும். மற்றும் எந்த ஜன்மாவும்,



வினைகளை பெருக்கவும், அழிக்கவும், முடியாது, என்பதே ஸத்தியமாகும். இந்த மனித ஜன்மாவிலும், ஸாமான்ய குருவால், வினைப் பெருக்கம், பண்ண முடியுமே தவிர, வினையை அழிக்கவும் முடியாது. ஜீவன் முக்தியும் பெறவும் முடியாது. ஸத்குரு ஒருவரால் மட்டும், வினைகளை பெருக்காமல் பண்ணவும், இருக்கும் முவினைகளை அழிக்கவும், வினைக்கு காரணமான, மனதை அழிக்கவும், பின் ஜீவன்முக்தி கொடுக்கவும், முடியும். மற்றும் எந்த சக்தியாலும், அஷ்ட சித்திகளாலும், ஜீவன் முக்தி பெற முடியாது, என்பதும் ஸத்தியமே. ஆத்ம ஞானம் ஒன்றுவேயே, ஜீவன் முக்தி பெற முடியும்.



உ

எதிர் எதிராக தெரிவதெல்லாம், **விகாரம்** ஆகும். (௫)

புதிர் புதிராக தோற்றுவது எல்லாம், **விவகாரம்** பிரச்சனை ஆகும்.

(௩)

**நாமரூப** ஜக ஜீவ தோற்றங்கள்! உறவு, சுற்றம், நட்பாகவும்! பொன் பொருள், பாத்திர, பண்டம், பாண்டம், இவைகளாகவும்! இவைகள் எல்லாமாகவும்! **ஏதும் புதிருமாகவும்!** நேருக்கு நேராக தோற்றுவதாகவும்! அவன், அவள்! அது, இது! நான், நீ! எனது, உனது! என பல பல நிலைகளில், **பேசப் பேசியே!** இல்லாத உலகுக்கு, **உண்டு! உண்டு!** என, **உயிர்** கொடுக்கிறோம். இவைகள் அனித்தம், **மண்** என பிரத்தியக்ஷமாக உணர்ந்தும், மடமையான, மனம்! பழக்க வழக்க, தோஷத்தால், இதை மண் தான் என, நம்ப மறுக்கிறது. அப்படி, நம் மனதில் உரம், ஏறிப் போய் விட்டது. இதை, அணு அணுவாக, குறைக்க வேண்டும்.




இந்த ஏழையின் (6)
மீது, உனக்கு பரி
பூர்ணமான, நம்பிக்கை
இருந்தால், அவஸ்யம்
உன்னால் முடியும். யாம்
சர்வானந்தர் யாமிட்டு!!
மட்டும், தொடரும்.

எப்படி என்றால்? எல்லாம் **மண்ணே!**
மண்ணே **எல்லாம்!** பரமாகிய
**மண்ணே!** மண்ணாகிய **பரமே!**
பரமாகிய **நாமே!** நாமாகிய **பரமே!**
நமக்கு அன்னியமாக (பரத்திற்கு அன்னியமாக) **எதுவும்**, இல்லவே இல்லையென்று
ஸ்ரீ ஸத் குரு தேவனின்! உறுதியான, நம்பிக்கை, வைராக்கியம், அசைக்க முடியாமல் இருந்தால், அதுவே **பிரம்மஞானம்** ஆகும்.

(4) காண்பன எல்லாம், மாறும் மறையும்; என்றும்! தோன்றின மறையும். மறைந்தன தோன்றும்! பெருத்தன சிறுக்கும். சிறுத்தன பெருக்கும்! உண்டன அனைத்தும் **மலமாகும்**. உடுத்துவன (புனைவன) அனைத்தும்,



7

எம் ஸத்திய வாக்குப்படி இட்டுச் செல்ல முடியும். அது அதுவாகிய அவன்! கருணையாகும். அனுப்பிரமாணம் சந்தேகம் கொண்டாலும் உங்களால் முடியாது. உங்கள் மனமே பகைவன். உங்கள் அறிவே நண்பன். முடிந்தது.

முடியுமா என்ற சந்தேகமே பகைவன்.
முடியும் என்ற நம்பிக்கையே நண்பன்.

**அழுக்காகும்!** நம்மைக் கொன்றவைகளையே, நாம் கொல்கின்றோம் என்றும்! நாம் கொன்றவைகளே, நம்மைக் கொல்கின்றன என்றும்! நாம் தின்றவைகளே, நம்மை தின்கின்றன என்றும்! நம்மைத் தின்றவைகளையே, நாம் தின்கின்றோம் என்றும்! இவ்வுலகம், ஓர் **பற்றுவரவு!** தீர்க்கும், ஓர் **நாடக** மேடை என்றும்! **எல்லாம் நீயே!** என அமைதியுற்று நமக்குள் நாம், அடங்கிட, பேச்சைக் குறைத்து, எதிலும் விட்டுக் கொடுத்து, எதையும் அன்புடன், சகித்து ஏற்றுக் கொண்டு, பொறுமையின், சிகரமாய், எல்லாம் நலமே என்றும் இருப்பது ஒன்றே! நடப்பது நலமே என! பரி**பூரண நிறைவுடன்!** இருப்பது ஆத்ம **ஞானம்!**



கண்ணால் காண்பதையும் காதால் (8)
கேட்பதையும்
உண்மையென நீ
நம்பினால் உன்மனம்
உன்னை ஏமாற்றுகிறது
என உணர்வாயாக.
அங்கு இறை குரு
உணர்வுடன் சற்று பொறுமையுடன் தொடரும்.

(5)

கண்ணுக்கு கண் எதிரே, காண்பதையும்!
காதுகளில் நேருக்கு நேராக, கேட்பதையும்!
இதுவே, **ஸத்யம்**! என நம்பிவிடாதே.
எதிரில் தோற்றும், நாமரூப ஜீவர்களின்
**வினையின்** கணக்கும்; அவ்வினையின்படி,
ஒழுங்காக நடத்தும், **விதியின்** பாரப
க்ஷம் இல்லாமல், நடத்தும் திட்டமிட்ட, நாடக
இயக்கமும்; அங்கு உன் கண் எதிரே தோற்றும்,
அவர்களுடைய, **மாயாமனதின்**!
இயக்க வார்த்தைகளும்! செய்கைகளும்!
உன் மனதிற்கு, புரியாத **புதிர்** (பிரச்சனை)
ஆகும். அக்காரியத்தின்! **முன்/பின்**!
கணக்கு
உன் மனம், அறிய முடியாது. அறிய இயலாது.
இங்கு உன் மனம், உன் வினையின் படியும்!
உன் விதியின் படியும்! ஓர் முடிவு செய்து,
**நீதி** உரைத்தாலும்; தீர்வு கண்டாலும்
அது பொருந்தாது, என்பதே ஸத்தியமாகும்.




காத்திருந்தால் (9)
மனதின் வழி
அடைபட்டு விட்டதை
உணர். அங்கு ஸ்ரீபகவான்
ஆகிய **அறிவு**
பிரகாசிக்க ஆரம்பமாகி
விட்டதை உணர். அங்கு
முடிவு நலமாகவே முடியும்.
முடிந்தது.

அங்கு, சற்று பொறுமையுடனும், ஸ்ரீ பகவத் சிந்தனையுடனும், சற்று காத்திருந்தால், உன்னுள்ளும்! அங்கு எதிராளியினுள்ளும்! **அந்தர்யாமி**யாக உள்ள, ஸ்ரீபகவான், உணர்வு பூர்வமாக, அவஸ்யம் உணர்த்துவான். இது ஸத்தியம்! இது ஸத்தியம்! இது ஸத்தியம்! இது இந்த, ஏழையின் அனுபவம் ஆகும். அங்கு, அவசர முடிவுடன், ஓர் தீர்ப்பு சொன்னாலும், அங்கு, தீர்வு கண்டாலும்,

(A) உன் வாக்கு விரயம் ஆகும்.
(B) மனோ சஞ்சலம் உண்டாகும்.
(C) அவன் வினையும், உன் வினையும், பின்னிவிடும்.
(D) மறைமுகமாக **பழி** (பழிச் சொல்லும்) **பாபமும்** (பாவச் செயலும்) உன்னைச் சேரும்.

சற்று நிதானமாக, பொறுமையாக, ஸ்ரீபகவான் உணர்வாக, உன் நாவு அசைந்தால், அங்கு, **நீ** பேசமாட்டாய்! பேசமுடியாது! பேச இயலாது! **அவன்** உன்னுள் இருந்து பேசுவான்! அங்கு வேகம், ஆத்திரம், அவசரம், படபடப்பு, இருக்காது.



இன்பமும் துன்பமும், (10)
மனதின் எண்ணம்
ஆகும். இது மனதின்
சொரூபம் ஆகும்.
ஆனந்தம் என்பது உன்
அறிவின் வடிவமாகும்.
ஆனந்தம் பெறுவது எங்ஙனம்?
பொறுமை! அமைதி! போதும்
என்ற நிறைவு! தேவைகளையும், ஆசைகளையும்
குறைத்து எளிமையை ஏற்றால்! ஆனந்தம் உண்டாகும்

மனச் சஞ்சலமும், கலக்க பயமும் தோன்றாது. ஓர் நிறைவான, ஆனந்தம் தோன்றும். லீலை யின் பின்னால், அங்கு வராது உன் வினை தீர்வதாக இருந்தால், உன்னை பேச வைப்பான். உன் வினை, சம்பந்தம் இல்லையானால், உன்னை விலக்கி விடுவான். இல்லையாயின், உன் எதிரே, அந்த நிகழ்ச்சி, நடைபெறாமல், மறைக்கவும் ஸ்ரீ பகவானால் முடியும். எல்லாம் அவனே! என்பதும், எல்லாம் அவன் பொருளே! என்பதும் எல்லாம் அவன் செயலே! என்பதும். ஸத்தியமாகும், உன் இருப்பு! உன் பொருள்! உன் இயக்கம்! இம் மூன்றும் இல்லாமல், அழிந்த தன்மையில் **நாமரூப** சம்பந்த, எந்த வஸ்துவும் இல்லை. எந்த இயக்கமும் இல்லை. அங்கு வினை! விதி! மனம்! இல்லை. காலாதீத அதுவோ இயக்கம் இல்லை. ஆனால் அவன் இயங்குவான். உன் சர்வார்ப்பணத்தால், அவன் ஆகிய நீ! அது ஆகிவிடுவாய்! உன் ஸத்குரு கிருபையால், பெற்ற பிரம்மார்ப்பணத்தால், பரிபூரணமாகி விடுவாய். இதுவே, **ஆத்மஞானம்** என, ஸ்ரீ மகான்கள் சொல்வர்.



காமதகனை ஒரே (11) மந்திரமாவது? ஹரோம்! என்ற ஒன்றே யாகும். ,, ஒன்றே போதும். ,, ஒன்றால் முடியும். இடையறாத ஜபமே தேவை!

ஓ பிறந்த இடத்தை நோக்குதே — பேதை மட நெஞ்சம்???

கறந்த இடத்தை (அமுதுண்ட இடத்தை) நோக்குதே கண்ணே??

என்றார், எம்பட்டினத்தடிகள். இன்றைய கலியுகத்தில், இன்றைய தோஷ விஷமனம் உள்ள, மனித ஆண் இனங்கள், தம் பார்வையையும் & அதை இணைத்த மனதையும் (எண்ணத்தையும்) பறிகொடுத்த தன்மையால், தெரு நாய் போல், அலைகின்றனர். இந்நிலையை, காதல் என, பேசிக் கொள்கின்றனர். இது காதல் அல்ல. இது மோஹ, காம, போஹ, வெறி! ஆகும்.

பட்ட இடமே படும்! கெட்ட குடியே கெடும்! என ஓர் பழமொழி உண்டு. அதன்படி சிவ சிவ,



இந்த ஆண் இன, (12)
மோஹ காம வெறி
யை, விளக்கை, பழம்
என மயங்கி, பாய்ந்து
விழுந்து, கருகிப்
போகும், விட்டில்
பூச்சியை, ஒப்பிடலாம்.
ஹரே ராம் பெருமை வழியில்,
இவ்வழியில் இருந்து மீளலாம்.

**ஆண்**/ இனங்கள், மனம் அடிமையாகிறது.
இது அரிப்பெடுக்கும், **படை** நோயைப், போன்றதாகும். இது இக்கலியுகத்தின் சிறப்பு ஆகும்.
இதில் **வீட்டு** நாயும், **தெரு** நாயுடன் சேர்ந்து,
பழகும்/ **பழக்க** (காம ரஸ ஸ்வாரஸ்ய பேச்சு)
**வழக்க** (காம மோஹ செய்கையின் பேச்சு)
இவ்விரண்டினையும், இவர்கள் **மனமாது**
**போதை**/ மயக்கத்திற்கு, அடிமையாகி விடுகிறது.

**கவனம் தேவை!**

(A) அனைவரையும் உன் அன்னையாக பார்க்கப் பழகு!
(B) " ஸ்ரீ அம்பாளாக " " !
(C) **ஹரேராம்/ஹரேராம்!**
என உள்ளம் உருக, கண்ணீர் பெருகிஓட, சில
**நொடிகள்** கண்ணையும்/ மனதையும்/ சற்று மூடுவாயாக.



ஸ்ரீராமனின்! (13)
ஸத்திய தர்ம
த்துடன், தோன்றிய
ஓர், தெய்வீகமான
ரூபம் ஆகும்.
ஹே ராம்
என்பது, யோகமாயாவல்ல
யோகமாயாவுடன் கூடிய தொடரும்.

உன்றால் முடியும். முடியாததை இப்
வைத்தியம் புலம்பாது. எழுதாது.
இது ஸத்தியம்.
ஸத்திய தர்மத்திற்காக
தோன்றியது, ஸ்ரீராமன் சொரூபமாகும். வே
இங்கு உங்கள், காம எண்ணமும் ஓர் நாமரூப
சம்பந்தம் கொண்டதாகும். இந்திரியால்,
யாம் சொல்லும் ஸ்ரீராமன் ரூபம் ஆகும்.
" " ஹேராம் நாமம் ஆகும்.
இந்த பவித்ரமான ரூபமும்! அக்கினி ஜோதி
அம்சமான, நாமமும் இது மந்திரமும் ஆகும்
அவஸ்யம், உன் மனதில் தோன்றிய, காமா
க்கினியை! நம் யோகாக்
கினியுடன்! இணைத்து, ஒன்றாக
பரத்துடன், கலந்து விடும். இது ஸத்தியம்.



இ யோகுரு (14)
ஞக்கணி

சம்பந்த ஓர் சுடர் ஆகும். இது ஒர் நிலையில் **நாமம்** ஆகும். இங்கு உன் காம எண்ணமும், ஓர் ரூபமும், நாமமாவும் இணைந்ததாகும். தொடரும்.

இங்கு பொறுமையுடனும்! சகிப்புத்தன்மையுடனும்! உன் மன உருக்கமும்! கண்ணீர் பெருக்கமும் தான்; உன் **சாதனை** ஆகும். இத்துடன், **மண்** ஆசைப்பட்டவனு, **மண்ணோ!** உண்டு போய் விட்டதடா! என்று, எம் ஸ்ரீபட்டினத்தடிகள், வாக்கியத்தையும், உன் உள்ளத்தில் கொண்டு; எல்லாம் **மண்ணே!** மண்ணே **எல்லாம்!** பரமே **மண்!** மண்ணே **பரம்!** பரமே **நாம்!** நாமே **பரம்!**

ஆகவே இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என்று **பரபாவனையோடு!** ஒன்றிக் கலப்பதுவே, **ஆத்மஞானம்** ஆகும்.



(16)

அஞ்ஞான ரூப
நாமத்தை,
மெய் ஞான
ரூப நாம, சுடரானது
தகித்து, சாம்பல்
ஆக்க முடியும் என்று,
ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
அஞ்ஞான ரூபநாமமானது,
வடிவமாகும். தொடரும்.

மதே

(7)

காமாக்கினியை **தம்** யோகாக்கினியுடன்!
இணைத்து, ஒன்றாக **பந்தம்** கலந்து விடும்
என்ற, ஸத்திய வாசகத்தின், விளக்கமாவது:—
ஹயன்! ஹரி! ஹரன்! ஆகிய இம் மூன்றுக்கும், ஒன்பு
விளக்கம் கொடுத்திருந்தோம். ஹயன் என்றும், அந்த
காவாத்த **ஒன்றின்!** இருப்புத் தன்மையை
மட்டும், உணர்த்துகிறது என்றும். ஹரி என்றும்,
அந்த ஒன்றை, அறிந்துணரும், **அறிவு** என்றும்,
ஹரன் என்றும், அந்த மெய் அறிவைப், பெறும்
நியமன், **ஸத்திய தர்மம்** என்றும்,
இம் மூன்றுமே, **நாமம்** (இருப்பு/அறிவு/ தர்மம்!)
மட்டும், உண்டென்றும், **ரூபம்** இவ்வியென்றும்,
உணர்த்திடஇருந்தோம். முன்பவடல்களில்
யோகமாயா என்றும், **அண்ட** சிருஷ்டி என்றும்,
வோகமாயா என்றும், நாமரூப **பிண்ட** சிருஷ்டி என்றும்,
விஷ்ணுமாயா என்றும், **மையை** மயக்க சிருஷ்டி என்றும்.
(எண்ணத்திறவ் / மயக்கம்)



மெய் ஞான
ரூப நாமமானது, (16)
அறிவின்
சுடர் வடிவமானது.
முந்தையது காமாக்கினி
பிந்தையது ஞானாக்கினி.
ஆகவே இவ்விரண்டும் ஒன்றி
ந்து, அகண்ட பேரொளியில், கலந்துவிடும்.
முடிந்தது.

கூறியது, ஞாபகம் இருக்கலாம். இந்த விஷ்ணு
புக்கு, ஓர் விளக்கம் தருகிறோம். உணரவும்:—

ஹரியின், ஓர் அணுப்பிரமாண அம்சமே,
நாராயணன் என்ற, ஓர் மூர்த்தியாகும்.
இதை நாராயணன், எனச் சொல்லாமல் (ம்) நாரா
யணா! என்றால், அது ஜல, அம்சத்தை
குறிக்கும். அதாவது, க்ஷீசம் என்ற,
மங்களாம்! என்ற சமுத்திரத்தை குறிப்பதாகும்.
ஆகவேதான், ஸ்ரீ மஹான்கள், வாழ்த்துரை கூறும்போது,
நாராயணா! எனச் சொல்லி, வாழ்த்துகிறார்கள்.
ஜல அம்ச நாராயணனே பாற்கடல் வாசன்,
என்றும் சொல்வதுண்டு.

இதைப் போலவே, விஷ்ணு எனச் சொன்னால்,
அது ஓர் நிலையில், நாராயணன் என்ற, மூர்த்தியையும்
குறிக்கும். மற்றோர் நிலையில், ஆகாயம்!
என்ற நிர்மல, வெட்ட வெளியையும் குறிக்கும்!
என ஸ்ரீமஹான்கள், வாயிலாக அறிகிறோம்.



யோகமாயாவின் (17)
மூலம், ஓம் காரமாகும்.
அதுவே **ராம்** ஆகும்.
அதுவே மோஹத்தை உலர்த்தி பக்குவப்படுத்தி, எரிக்கும் **ஹ்ரோம்**
ஞான என்று, யோகாக்கினியாகும்.
இது ஸம்ஸாரிகளுக்கு உரிய, அக்கினியாகும்.

ஆகவே தான், ஸ்ரீ மஹான்கள், தம் அனுபவ வாக்காக, சொல்லும் போது, அவர்கள் ஸத்திய வாக்காக: **ஸர்வம் விஷ்ணுமயம்** என்றார்கள். இந்த விஷ்ணுவும், எந்த **மூர்த்தியும்** இல்லை. இந்த விஷ்ணு **விஷ்ணுமாயா** என்ற **மனமாயாவை** குறிப்பதாகும், என்றார்கள் ஸ்ரீ மஹான்கள். இந்த விஷ்ணுமாயா என்பது, **நாமரூப குண** சம்பந்த மாயாவாகும். இது ஜகத்துக்குரிய, **ஜீவமயக்கத்திற்கு** உரியதாகும், என்பது ஸ்ரீ மஹான்கள் கணிப்பாகும். நம் மனதின், எண்ண குண மயக்கம் என்பது, விஷ்ணுமாயாவாகும்.

ஆகாய அம்ஸ நாராயணனே வைகுண்ட வாசன், என்று, சொல்வதுண்டு.

இனி முன்பு கூறிய, விளக்கத்திற்கு வருவோம். முன் கூறிய, காமாக்கினி என்பது, **பெண்** இனத்தை/ **ஆண்** இனம்/ காண்பதிலும், அதுபற்றி பேசுவதிலும். அவைகளை



யோகமாயாவானது,
மஹத் சிருஷ்டியாகும். (18)
லோகமாயா வானது,
ஜஹத் சிருஷ்டியாகும்.
விஷ்ணுமாயா என்பது,
ஜகத் சிருஷ்டியில், மோஹம்
கொண்டு, மயங்கப் பண்ணும்,
ஆகும்.

**மாயா மனம்**

**தொடுவதையும்** ஏற்படும் ஓர்,
மோஹ, லோப, காம, வெறியாகும். இதுவே
விஷ்ணுமாயா வின், காரிய மாகும்.

(1) லோகமாயா என்பது, நாம ரூப பிண்ட
(ஜீவ சொரூபங்கள்) சிருஷ்டியுடன் முடிவுறும்.

(2) யோகமாயா என்பது, "ஹரே ராம்" என்ற,
ஞான **யோகாக்கினி** ஆகும்.

(3) விஷ்ணுமாயா என்பது, **ஜனனமரண**
பீஜமாகிய, யோனிசம்பந்தம், கொண்டதாகும்.
இதை சிரத்தையுடன் உணரவும்!

ஒவ்வொரு தாவமும், வந்த வழியே, **அவ்வழி**
(யோனிதுவாரம்) ஆகும்
ஒவ்வொரு ஜீவனும், **எண்ணிலெண்ணி**
விட்டில்பூச்சி யென, கருகிசாவதும், **அவ்வழியே**
(யோனி துவாரம்) ஆகும். **ஆகவே**



**விஷ்ணு** (19)

என்றால் ஓர் நிலையில் ஆகாயம் எனக் கொள்ளலாம். இதை வீர வைஷ்ணவர்கள் ஹரி என்றும், விஷ்ணு என்றும், ஸ்ரீமஹாங்காரர்

**ஒலி** அம்சமான பரசொரூப ஸ்திதியைத் தொடரும்.

**உற்பத்தியின் பாதையே! அழிக்கும்** (அழியும்)

மனம் எண்ணி, எண்ணி, பாதையாக அமைகிறது. இதல் ஓர் உண்மை, இக்கலியுகத்திற்காக, எப்படி வெளியாகிறது என்றால்???

ஒருவன் பெற்ற தாயிடமே, போகம் அனுபவிப்பான்!!!!!

அது **கலிதோஷகுண தர்மமாகும்**

யோகாக்கினி (ஹரே ராம்) என்பது, வைராக்கிய அக்கினியாகும்.

காமாக்கினி **நான் & எனது** (என்றால்) என தோன்றும், மோஹாக்கினியாகும்.

இவ்விரண்டுமே, **மாயா** சம்பந்தம், கொண்ட தன்மையினால், ஹரே ராம் என்ற, ஞான யோகாக்கினியில், காம மோஹாக்கினி / கலந்து மயமாகிவிடும் என்பது, ஸ்ரீமஹான்களின் ஸ்வய அனுபவம் ஆகும். ஆகவே **காமத்தை வெல்ல** வேறு, எந்த மார்க்கமும், இல்லையென்பதே ஸத்தியம்.



வைகுண்டவாசன் (20)
என்றும், பாற்
கடல் வாசன் என்றும்,
ஆகாயநிறையும்! இவமா
கிய பாற் கடல் என்றும்,
சுட்டிக்காட்டி இவ்விரண்
டையும் ஸ்ரீமந் நாராயணன்
வாசஸ்தலமாக
வைத்துக் கொண்டார்கள். ஆதலால் அந்த ஹரியும்
விஷ்ணுவும் மூர்த்தி அல்ல என்பதே ஸத்தியம்
முடிந்தது.

**நானானது!** நாம ரூப ஜகம், இருப்பு உடையதாகிறது.

(நான் என்பதில், என்னை அடக்கி விட்டால்) நாம ரூப ஜகத்தில், தோஷ குணங்கள் உண்டாகின்றன.

" " தோற்றமும், தோற்றத்தால் சொந்தமும், சொந்தத்தால் பந்தமும், பந்தத்தால் புண்ணிய பாப வினையும், உண்டாகிறது.

" " குற்றம் குறை! புண்ய பாபம்! விருப்பு வெறுப்பு! பேதாபேதம்! குடும்பம் என்ற சம்சாரத்தின் பிணைப்பு, உண்டாகிறது.

" " காம, மோஹ, லோப, லோக, ஆத்திரம், அவசரம், வேகம், படபடப்பு, சந்தேக கலக்க கலங்க பயம், உண்டாகிறது.

" " **விட்டுவிட்டால்**

இதில் கூறிய அனைத்தும் **சர்வநாசம்!**

**மறுகணமே** அடையும்

இந்த ஸ்வய அனுபவமே **ஆத்மஞானம்** ஆகும்.



மீண்டும், மீண்டும், (21)
என்றும் நடப்பன!
பறப்பன! நீந்துவன!
ஊர்வன! புழு பூச்சி!
ஆகிய அனைத்து ஜீவ
வர்க்கங்களும் தம்
இனப்பெருக்கத்திற்காக

மீண்டும் மீண்டும் பிறந்து இறப்பதாகும்.
தொடரும்.

(8)


ஒவ்வொரு தாவரமும், வந்த வழி, அவ்வழியாகும்.

ஒவ்வொரு ஜீவனும் (புழு பூச்சி, முதற் கொண்டு, மனித இனத்தையும் சேர்த்து! நடப்பன! பறப்பன! நீந்துவன! ஊர்வன! ஆகிய அனைத்து ஜீவ கோடிகளும்) இனப்பெருக்கம் என்ற நிலையில், மீண்டும் மீண்டும்! எண்ணி எண்ணி மீண்டும் மீண்டும்! எண்ணி எண்ணி! மீண்டும் மீண்டும்! எண்ணி எண்ணி! விளக்கை, பழம் என எண்ணி, அதிலேயே விழுந்து, கருகிப் போகும், விட்டில் பூச்சி போல.

கருகி சாவதும்! அவ்வழியாகும்.

(A) மனித இனம் மட்டும், தாம் அமுது (பால்) உண்டு! வளர்ந்த இடத்தையே, காம மோகத்துடன், கற்பனை! பண்ணி பண்ணி! ஏங்குவதும்! தாம் வந்த வழியையே, எண்ணி எண்ணி! ஏங்குவதும்!!

(B) மற்றும், அனைத்து ஜீவராசிகளும் (மிருகம்! பறவை! மீன்) எந்த வகையிலும், இனப்பெருக்கத்தையே! சர்வ சதா, நாடி, தேடி, ஓடவும்! இது ஆச்சரிய மாக இல்லையா?



(22)

எண்ணி, எண்ணி என்றும், அந்த மனம் வைத்த, மனித இனம் மட்டும், நம் மனமய சுற்றியில், காம, மோக, போக, வேறு உணர்ச்சியை உண்டு பண்ணி, எண்ணி எண்ணி! ஜனன மரணத்தை, பெருக்குவதாகும். முடிந்தது.

இதன் காரணமாவது?

**நாமரூப! ஜக ஜீவ! சொரூப! சிருஷ்டியே!** ஆகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர். ↘காரணம்

முந்தைய, மூன்று யுகங்களில், ஸ்ரீமஹான்களின் சிருஷ்டி, எப்படி இருந்தது என்றால்?

**திருஷ்டியின் சிருஷ்டி!** ஆகும்.

இக் கலியுகத்தில் மட்டும்?

**சேர்க்கையின் சிருஷ்டி!** ஆகும்.

மண்மய சிருஷ்டி, மஹேசன் சிருஷ்டி! என்றும், மனமய சிருஷ்டி, ஜீவனின் சிருஷ்டி! என்றும், வேதம் சொல்கிறது. முன்பு வாழ்ந்த, ஸ்ரீமஹான்கள் தங்கள் மனதை, கூர்ந்த **அறிவாக** வைத்திருந்தார்கள். இதை கூர்ந்த புத்தி என்றும் சொல்லலாம். அவர்கள் மனமானது, எதை எண்ணிடுவும், அதை அப்படியே, **நாமரூபம்** பெறச் செய்யும், ஆற்றல் உடையதாக, இருந்தது. காரணம்?



மனமே தான் அறிவாக மாறும். (௨௩)
கற்பனையை விரித்து சொந்த பந்த பாசத்தில் வீழ்ந்து அவதியுறும் போது அது மனம் ஆகிறது.
சொந்த பந்த பாசத்தின் கற்பனையை கெடுத்து,
எல்லாம் ஸ்ரீபகவான் செயல். எல்லாம் ஸ்ரீபகவான் பொருள். தொடரும்

அன்று **தோஷ குணங்கள்** இல்லாதிருந்தது. அன்று **ஸத்வ குணம்** ஒன்றே! அனைவரிடமும் இருந்தது. ஆகவே, அவர்களால், அவ்விதம் சாதிக்க முடிந்தது. ஆனால் இன்று, தோஷ குணங்கள் பின்னி, பிணை யாடுவதால், இன்று அவ்வாறு முடியவில்லை. அன்று! ஒன்றின் வலிமையினால், மற்றொன்றை, உண்டு பண்ண முடியும். ஆனால் இன்று! ஒன்று மற்றொன்றை **இணைந்தால் தான்!** இன்னொன்றை, உண்டு பண்ண முடியும். என்பதே **காலத்தின் விதி** ஆகி விட்டது. இவை சிருஷ்டியின், **ஆதாரமாக!** இருக்கிறபடியால், இதை (ஆண் பெண் சேர்க்கையை) தவறாகவோ! குற்றமாகவோ! தோஷமாகவோ! பாவச் செயலாகவோ! சொல்லக் கூடாது! சொல்ல இயலாது.



எல்லாம் அவனே (௨௬)
என்ற உறுதி நிச்சயம்
பண்ணும் நிலையில்
கூர்ந்து உணரும் நிலை
பெற்றதால் அம்மனமே
அறிவாகி விடுகிறது.
சந்தேக கலக்க பயம் உற்ற
நிலையில் அதுவே மனம். சந்
தேக கலக்க பயமற்ற நிலையில் ஸ்ரீபகவத் உணர்வோடு
அசைவற்றிருப்பது அறிவாகும். முடிந்தது.

ஆனால்? ஆன்ம சாதகனே நீ
கருவறையை நாடாமலும்! தேடாமலும்! எண்ணாமலும்!
இனி ஓர் கருவறை புகாமலும்!
ஜீவன் முக்தி பெற வந்தவனுமாகும். ஆகவே இவ்வுபதேசம்
நாமரூப உலகுக்கல்ல! உனக்கு மட்டுமே!
நாமரூப, ஜகஜீவ, தோற்றங்கள் பொய் என்றும்,
நாமாதீத பர சொரூபமே சத்தியம் என்றும். அதுவே
நாம் என்றும், நாமே அது என்றும், உறுதி
பூண்ட நீ சர்வ ஜாக்ரதையாக, இருக்க வேண்டும்.
உன் பந்த பாசத்தை
தேடாமலும்! நாடாமலும்! காணாமலும்! எண்ணாமலும்!
பேசாமலும்! விமர்சிக்காமலும்! மறைமுக
மாக! கற்பனையை, விரித்து அதனை,



நான்/என்னுடைய (25)

மஹா என எண்ணமல்
ஸ்ரீ பகவானின் பொருளே
ஸ்ரீ பகவானே இயக்குகிறான்
அவனேயாம்! யாமே அவன்!
எல்லாம் அவன் காரியமே! இத்தாலும் அவன்!கை!
கருவியே என ஸத்தியமாய் நம்புவாயாக. தொட்டும்

விருந்து விடாமலும்! அதை கத்தியின்

போல், எண்ணி நடப்பாயாக! நடந்து கடப்பாயாக!

(கத்தி முனையில் நடக்கவும்! கடக்கவும் முடியாது தான்)

நீங்கள் எம் குழந்தைகள்

ஆனால்? எம்குழந்தைகளால்

அவஸ்யம்

முடியும்!

இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!

உங்கள் சாதனையுடன், (புதுவது பாடல்) ஹரே ராம் கலந்து

மயமாகட்டும். எம் ஸ்ரீ ரிபு மஹாத்மா அருளியபடி:—

பற்பலவாய் தோன்றிய. அச்

சுகத்தை எல்லாம் பரப்பிரம்ம

சொரூப சுகம்!!! என உறுதிபண்ணுவாயாக.

கற்பனையான; விஷய விஷம்

இன்பம் வேண்டாம்; என உறுதி பண்ணுவாயாக.




26

கற்பனையான, விஷய இன்பத்தை அழிப்பதற்கு!

**ஹரே ராம்** என்ற, யோக ஞானக்கினியாகும்.

நாமரூப! ஜகஜீவ! அனைத்து தோற்றங்களையும்!
நாசம் செய்வதற்கு; **எல்லாம்** பரமாகிய
**மண்ணே!** என்றும்; மண்ணாகிய **பரமே!**
என்றும்; பரமாகிய **நாமே!** என்றும்; நாமாகிய
**பரமே!** என்றும்; இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!
என மௌனானந்தம் பெறுவதே! ஆத்ம **ஞானம்** ஆகும்.

**678** ஆகிய இம் **மூன்றும்!**

குடும்பிகளாகிய, ஸம்ஸாரிகளுக்கு உரிய
தாகும். இக்கலியுகமே, **காம, மோஹ,
போஹத்தில்!** அச்ஜீவர்களை, சிக்கவைத்து
ஜனனமரண படுகுழியில், தள்ளிவிடுவதாகும்.
ஆகவே சற்று கவனமாகவும். இறைகுரு உணர்வு
டனும் இருந்து, சந்தேக கவலை, பயத்தைநீக்கு.



**காம** ரஸனையான (27)
கற்பனைகளையும்,
அப்படி பார்க்காமலும்!
,, பேசாமலும்!
,, கேட்காமலும்!
நீ அடக்க வேண்டுமானால்,
எப்படியாம் நீயே! என்ற பரி
பூரண சரணாகதி தவிர வேறு வழியில்லை.

எம் ஆனந்த குழந்தைகளே! உங்களுக்கு
உறுதியாக கூறுகிறேம்.

(A) உங்கள் ஆண் பெண் உறவு! **கூடாது** எனயாம், கூறவில்லை. அது **விதிக்கப் பட்ட** ஒன்றுதும். **ஆனால்?**

(B) மோஹ! போஹ! **வெறி**! வேண்டாம். சற்று குறைத்துக் கொள்ளலாம்.

(C) குறிப்பிட்ட காலமும்! குறிப்பிட்ட இடமும்! அவஸ்யம் வேண்டும்!

(D) ஒருவனுக்கு ஒருத்தி! ஒருத்திக்கு ஒருவன்! என்ற, வரை முறை வேண்டும்!


(E) அவயவ கற்பனை வேண்டாம்! அவை **எவை** என்ற, மேலான கற்பனை வேண்டும்!

(F) அது சமயம், **ஹரே ராம்**! என்ற **பர**! உணர்வு வேண்டும்!

அவஸ்யம் ரக்ஷிக்கப் படுவீர்கள் என, ஆசி கூறி இதை நிறைவு செய்கிறேம்.


மேலும் குடும்பிக்கும்! ஸம்ஸாரிக்குமே! ஓர் விளக்கம் தந்து, இதை நிறைவு செய்கிறேம்.

பாபா.




# ௧ குடும்பி & ௨ ஸம்ஸாரி!

௧ குடும்பி:— குடும்பி என்றால், குடும்பஸ்தன்
எனக் கூறுவர். இதை இன்னோர் நடையில்,
சொல்வது என்றால் **குடுமி** எனவும் சொல்லலாம்.
அதாவது, குடுமி என்றால், முடி(ச்சு) போடும், சிகையை
(முடியை) உடையவன் ஆகும். இதை கேலியாக சொல்வது
என்றால்? அந்த கொண்டை முடியை, பற்றி ஆட்
டும் நடையில் அமையும். இப்படி கொண்டை
முடியை, பிடித்து ஆட்டுபவர், எவர் என்றால்?
கொண்டை முடி என்ற, இந்த குடுமியானது,
**நான்! எனது!** விடாதவர்க
ளுடைய, அஹங்கார அபிமான, **குணம்**
ஆகும். அக்குணத்தை, ஆட்டுவது, அவர்களுடைய (என்ற குடுமி)
**மனம்** ஆகும். ஆகவே நான்! என்றும், எனது!
விடாதவன் எவனோ, அவனே குடுமி! என்ற
**குடும்பி** ஆவான் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
(அக்குடும்பி தம் குடுமியால், ஆட்டப்படுகிறான்)





உ ஸம்ஸாரி:- ஸம்ஸார சாகரத்தை, உடையவன் ஸம்ஸாரி ஆவான். ஸம்ஸார சாகரம் என்பது, சர்வ சதாவும், **அலையோடு (அசைவோடு)** கூடியதாகும். அதாவது, **தேவையும் & ஆசையும்!** எந்த நேரமும், இடையறாது, ஓர் உள்ளத்தை, சர்வ சதா, அலைக்கழிக்கிறதோ, அவனே ஸம்ஸாரி ஆவான். தேவைகளையும், ஆசைகளையும்! எவன் ஒருவன் **அளவோடு!** அதாவது, ஸ்ரீபகவன் உணர்வோடு, எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என சர்வார்ப்பணமாக, வைத்திருக்கிறானோ, அவன் மனம், கடல் அலையைப்போல் அசைவதில்லை. அது **நிஸ்தரங்க (அலையற்ற)** சமுத்திரம் போன்றதாகும். **மன** அசைவற்றிருப்பவன் **ஞானி** என்றும், **மன** அசைவோடு இருப்பவன்! **ஸம்ஸாரி** என்றும்,






ஸ்ரீமஹான்கள் சொல்வர். இந்த குடும்பியும், ஸம்ஸாரியும், **நாம்** அல்ல; என்ற மெய்யுணர்வை, பெற வேண்டுமானால், எந்த விருடியும், நாம் **ஆணும்** அல்ல, நாம் **பெண்ணும்** அல்ல, **நாமரூப இனமும்** நாம் அல்ல, காலாதீத பரமாகிய மண்ணே நாம், மண்ணாகிய பரமே நாம், என்ற மெய்யுணர்வை பெறுவதுவே, **ஆத்ம ஞானம்** ஆகும்.

## 10 ஆவரணம், & விக்ஷேபம்,
(மயக்கம்) (கலக்க பயம்)


ஆவரணம் என்றால், ஞான் ஆவரணங்கள், எனப்பொருள் அல்ல. கண்ணால் காணக் கூடிய, மனித இனம் உட்பட, நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன, அனைத்து கிருமி கீடங்களும், மற்றும் தாவர வர்க்கங்களும் சேர்ந்த அனைத்து **நாமரூபங்களும்**, ஆவரணங்கள் ஆகும்.





மேலே சொல்லிய, இவை அனைத்தும் மனித மனங்களின்! காட்சிப் பொருளாகும். ஆனால் இவைகளை, சத்தியமாக உணர்ந்தால், எல்லாம் மனோ ஆகும். இந்த மனித மனமானது, எனக்கு! உனக்கு! என, போட்டி போட்டுக் கொண்டு; தேவைகளையும் ஆசைகளையும்! பெருக்கிக் கொள்ளும் போது, ஜீவ வர்க்கங்களும், மற்றும் அனைத்து, நாம ரூபங்களும், தோன்றின என்று, சொல்வதை விட, மனதால் தோற்றுவிக்கப்பட்டன, என்று தான் சொல்ல வேண்டும். அனைத்து தோற்றங்களும், தானே உண்டாகவும் இல்லை. உண்டாக்கவும் முடியாது. உண்டாக்கவும் இயலாது. இங்கு தான் மனோ மய சிருஷ்டி! ஜீவ சிருஷ்டி! என்பது, சத்தியமாகிறது. இத்தோற்றங்கள் எல்லாம் சொந்தம் கொண்டாடிய பந்தத்தால்!

(32)




எனது & உனதாம் உருவானதாகும்.

இந்த எனது உனது என்ற, சொந்த பந்தத்தால்தான், புண்ணிய பாப வினையும், அப்புண்ணிய பாபத்தால், ஜனனமரணமும், தொடர்ந்து, இந்த ஜீவனைப் பிடிக்கிறது.

ஆகவே மேலே கூறிய, இவை அனைத்தும், ஆவரணம் என, ஏன் சொல்கிறார்கள் என்றால்?

மனதால் உண்டான, இத் தோற்றம் அனைத்தும், ஓர்வித மயக்க போதனையை, உண்டு பண்ணும்.

ஆகவே தான், ஆவரண மயக்கம், எனச் சொன்னார்கள். இத் தோற்றங்களை, எனக்கு, உனக்கு, என போட்டி போட்டு, சொந்தம் கொண்டாடுவதால், அவை கொடுக்கல், வாங்கல், என்ற முறையில், கொடுத்ததை, வாங்க வேண்டும் என்றும், வாங்கியதை, கொடுக்க வேண்டும் என்றும், ஓர் பந்தம் உண்டாகி, அதுவே, பிறவித் தளையாய் மாறிவிடுகிறது.





தோற்றங்களின் மீதுள்ள பேராசையும்! மோஹமும்! வெறியாகமாறி! அதுவே விரோத! குரோத! வஞ்சகம்! சூழ்ச்சி! கபடம்! என இன்னமும் பற்பல குணங்களை எடுத்து இச்ஜீவனை தோவடிவங்களை எடுத்து இச்ஜீவனை ஆட்டிப்படைக்கிறது.

இந்த கொடுக்கல், வாங்கல் என்ற, பின்னலானது, **ஜனனத்தை** மாற்றி விடுகிறது. (ஜனனம் வெவ்வேறு, இடங்களில், வெவ்வேறு விதமாக, ஜனனம் எடுக்க ஏதுவாகி விடுகிறது) இப்படி ஜனனமும் (தோற்றமும்) இடமும் மாற்றப் படுவதால், **கொண்டு** கொடுக்கவும், **வந்து** வாங்கவும்! இப்படி, பண்டப் பரிவர்த்தனைதான், **போக்குவரவு** இயல்பாகவே, உண்டாகி விடுகிறது. இது எப்படி, வினையாக மாறுகிறது என்றால் இங்குதான் **விக்ஷேபகவக்கம்** கை கொடுக்கிறது. எனச் சொல்லலாம். அதாவது, ஆவரணத் தோற்றத்தில், மயங்கிய மனமானது. அத்தோற்றங்களின் **பேராசையும்&** **மோஹமும்**, (விடாப்பிடியான, வெறித் தனமான, ஆசையும்) இணைந்து கலந்து (போட்டி பொறாமை & பேராசை மோஹம், வைகளால்)



காவல் தெய்வங் (34) களில் பரிவார தெய்வம் என்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு, படை பரிவாரங்க ளுடன் வந்து அவரவர் வினைக்கேற்றபடி காத்து அருளும் தெய்வம் எனக் கொள்ளலாம்.

**சந்தேகம்** என்னும், ஓர் நச்சரவம் தீண்டி அந்த விஷமானது கிடைக்குமா? கிடைக்காதா? முடியுமா? முடியாதா? நடக்குமா? நடக்காதா? வேண்டுமா? வேண்டாமா? என இன்னமும், பல பல, கேள்விக் குறிகளுடன்!

**வேண்டும்! வேண்டும்!!** என்றே;

**வேண்டாம்/வேண்டாம்!!** என்றே; விருப்பு வெறுப்புடன் கூடிய ஓர் விகார **வெறி** உண்டாவதையே, விக்ஷேபம் களங்கத்தால் கலக்கம்! கலக்கத்தால் ஏக்கம்! துக்கத்தால் பயம்! அதுவே மரணபயம் உண்டாகி, அறியாமையின், இருள் சூழ்ந்து விடுகிறது. ஆகவே இதை அறி வின்றி விசாரித்தால்?

**நாமரூப/ஆவரணத்தால்!** ஓர் தோற்றமும்! தோற்றத்தால் சொந்தமும்! சொந்தத் தால் பந்தமும்! பந்தத்தால் பாசமும்! பாசத்தால் **பிறவித்தளை**யும் (விலங்கு) பின்னிவிடுகிறது என, விளங்குகிறது.




(35)

காவல் தெய்வங்களில் பரிஹாரதெய்வம் என்றும் புலி என்றும் ஆறை என்றும் நாய் கண்டு ஒதுக்கி கொண்டு அதற்கே தக்கபடி வினையை அறிந்து கண் துடைப்பு போல் இல்லாத உபகாரங்களை செய்து ஆதரிக்கும் தெய்வம் என பொருள்படும்.

அந்த ஆவரண தோற்றம், வேண்டும்! வேண்டாம்!
என்ற, **விருப்பு வெறுப்பினால்**
புண்ணிய பாபமும் ஜனன மரணமும் உண்டாகிறது,
என விளங்குகிறது.

இந்த ஆவரண மயக்கமும் விக்ஷேப கலக்கமும்!
நிர் மூலமாக, அழிய வேண்டுமானால்? தேவரீர்!
எல்லாம் மண்ணே! எல்லாம் ஒன்றே! எல்லாம் மண்ணே!
எல்லாம் ஒன்றே! எல்லாம் மண்ணே! எல்லாம் ஒன்றே!
என **உறுதி** பண்ணுவாயாக. அந்த அனுபவ நிலையில்
எல்லாம் பரமாகிய மண்ணே! எல்லாம் மண்ணாகிய பரமே!
எல்லாம் பரமாகிய நாமே! எல்லாம் நாமாகிய பரமே!
எனதிடமாக உணர்வதே! **ஆத்மஞானம்** ஆகும்

**(11) குல** தெய்வமும்! **குடும்ப** தெய்வமும்
**பிறவி** என்னும், குலத்தால் (பிறப்பால்) **குலமா?**
**குணத்தால் குலமா??** என்றால்,
பிறப்பால் குலமல்ல என்றும். குணத்தால்
தான், குலம் என்றும். ஸ்ரீமஹான்கள் சொல்வர்.



(36)

அறியாமையின் மாந்தர்களின் தேவையும்! ஆசையும்! பூர்த்தி ஆகும் நிலையில், தம்முள் உள்ள ஆத்ம சக்தியே ஓர் சொரூபமாக கொண்டு வரப்பட்டதென்றும், அதுவே ஒரு தெய்வமானதென்றும் சொல்வர் நம் முன்னோர். இக்குல தெய்வமானது? தொடரும்.

குணம் என்றால், அதன் வடிவம் **மனம்** ஆகும். மனம் என்றால், **எண்ணம்** ஆகும். எண்ணம் என்றால், **நாமரூப**! ஜகத்தை, கண்டு உணரும் நிலையாகும். நாமரூப ஜகத்தை, கண்டு உணரும் நிலையில், **நான்; எனது**! என, உடைமையும், உரிமையும், பாராட்டி, எனக்கு! உனக்கு! என, போட்டி போட்டு, பங்கு போடும், **வக்ர** குணமாகும். இந்த வக்ர குணங்களை, நிறைவேற்ற, **தெய்வபலம்**! வேண்டும். ஆகவே, நம் தேவையையும், ஆசைகளையும், பூர்த்தி செய்யும், அத்தெய்வமானது, தனக்கு, சகாயம் செய்யும் நிலையில், இருக்க வேண்டும். தனக்கு சகாயம் என்ற நிலை, தேவைப்படும் போது, **தம்** குணத்துக்கு ஏற்றபடி, **அத்** தெய்வமும், இருக்க வேண்டும் என்ற, **சுயதேவையின்** தெய்வமாக, அத்தெய்வங்களை, வரித்துக் கொண்டார்கள். அறியாமையின் மாந்தர். என மஹான்கள் சொல்வர்.




ஸ்ரீகிருஷ்ண
உபாசகருக்கு
அநர்த்தம் இனம் அடையாது.

நம் குலத்தை மட்டும் (37)
காக்கவும், மற்றும்
எவரையும் கண்டு
கொள்ளாமலும்,
(அவர்கள் பக்தியை
உணராமல்) **பூஜை**
க்கு உரிய பலனை கொடு
க்கும் நிலையிலும் ஆளை
இல்லையாதலால் நாம் ஒதுங்கிக் கொள்ளும் நிலை
யிலும் அமைந்ததே குலதெய்வமாகும். முடிந்தது.

அதுவே, **குலதெய்வம்** (என் குலத்தை
காக்க வேண்டும் என்றும், அதனால் பிறர், எப்படி
பாதிக்கப்பட்டாலும், கவலை இல்லையென, **நம்
மனதால்** கற்பனை பண்ணப்பட்ட, தெய்வம்)
ஆனதென, ஞானிகள் சொல்வர்.

**குடும்ப தெய்வம்** என்றால், அவரவர்
பூர்வ புண்ணியத்தால், ஓர் உபாசனா மூர்த்தியை,
ஏற்றுக் கொள்ளும் நிலையாகும். அது தொன்று
தொட்டும் (பூர்வ வாஸனையாலும்) வரலாம். இப்
பிறவியில், பழக்க வழக்க, வாசனையாலும் வரலாம்.
இக்குடும்ப தெய்வமும், இக்கலி தோஷ மஹிமையால்,
**விகாரம்** (தோஷம்) அடைந்து விட்டது. அதாவது
இக்குடும்ப தெய்வங்களும் **சிறு** தெய்வம்
என்ற நிலையில், **பரிவார (பரிஹார)**
தெய்வங்களாகி விட்டது. அப்படி ஆகவேண்டும்
என்பதே, விதியும், நியதியும் ஆகும்.



குலதெய்வங்கள், ஆலயங்களில், வழிபடும் தெய்வங்களாகவும்; குடும்ப தெய்வம் என்பது, வீட்டில் வழிபடும் தெய்வமாகவும்; குல தெய்வம் பூஜையின்பலனை மட்டும் தரும். பூஜை செய்யவில்லையானால், அவர்களை மறந்து விடும், என்றும் சொல்வர். தொடரும். (38)

அதன் காரணம்:— எம் வள்ளுவன் கூறியபடி:—
வெள்ளத்தனைய மலர்நீட்டம் — ஆங்கு
உள்ளத்தனையது உயர்வு/ என்றநிலையாகும்.
அதாவது, ஓர் குளத்தில், மலரும் தாமரை மலரானது, அக்குளத்தின், நீர் மட்டத்தின்,
அளவு படிதான் (நீராம்) அமையும். அங்கு
கூடவும் செய்யாது/ குறையவும் செய்யாது.
அதேபோல், ஓர் ஜீவனின் மனம் & குணம்
எப்படி அமைகிறதோ, அதன்படியேதான், அவன்
குடும்ப தெய்வமாகிய, உபாசனா மூர்த்தியும்
அமையும் என, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
ஆன்ம சாதனை பண்ணப்பட்ட, சாதகர்க
மட்டும், உங்கள் ஸத்குருநாதரின்
திருபா கடாக்ஷத்தால் (அவர்மீதுள்ள, நம்பிக்கையின், வைராக்கியத்தால்) இக் குல &
குடும்ப தெய்வங்களை, மாற்றி அமைக்க
முடியும் என, ஸ்ரீமஹான்கள் சொல்லக்கேள்வி.



(39)

குடும்ப தெய்வ மாகிய, வீட்டின் தெய்வம், பூஜை செய்ப வர்களை, நிலை கண்டு, காக்கும் என்பதும். பூஜை செய்ய விலை யாயின், அவர்கள் பூஜை செய்யும் வரை, காத்திருக்கும், கருணை கொண்டது உண்டு என, ஸ்ரீ மகான்கள் சொல்வர்


இதனிடம், தண்டிப்பு தண்டிப்பு இராது என அறிய முடிகிறது.

# பரிவார (காவல் சிறு தெய்வ) பரிஹார

தெய்வ வந்தனை வழியாகவே, குறைந்து குறைந்து **நிவர்த்தி**/ ஸத்வ குண, தெய்வத்தை மட்டும் ஏற்றுக் கொள்ள முடியும். இது ஸத்தியம். அந்த ஸத்வ குண தெய்வத்திடம், (ஸ்ரீ பகவானிடம்) முன் கூறிய நிலையால், சர்வார்ப்பணமும்/ பின் அனுபவ நிலையால், பிரம்மார்ப்பணமும்/ (ஒன்றாக) செய்து, எல்லாம் ஒன்றே/ அது பரமாகிய மண்ணே/ மண்ணாகிய பரமே/ பரமாகிய யாமே/ யாமாகிய பரமே/ என அனுபவம் பெறுவது/ **ஆத்ம** ஞானம் ஆகும்;

ஓம் ஓர் முக்கிய குறிப்பு/


**நான்**/ ஆணுமல்ல/ பெண்ணுமல்ல/ தாயுமல்ல/ தந்தையுமல்ல/ கணவனுமல்ல/ மனைவியுமல்ல/ குழந்தையுமல்ல/ ஸம்ஸார என்ற குடும்பியுமல்ல/ பந்த ஜீவனுமல்ல/ குலம் கோத்ரம் **ஏதுமல்ல**/ குல குடும்ப தெய்வங்களும், **எனக்கில்லை**!! எந்த நாம ரூப வஸ்துக்களும், நானுமல்ல/ எனக்குமல்ல//



அறிவு! (40)
இருக்கும் இயங்காது
என்றால். அறிவை
ஸ்ரீ பகவத் சொரூபம்
என்றும், சாட்சி சொரூ
பம் என்றும் சொல்வர்.
அறிவு ஸத்வ குண அம்ஸ
பொருளை! அமைதி! ஸாந்தி
அம்ஸமானது. ஆகவே அது
இருந்தாலும் இயக்கமும் இல்லாத் தன்மையிருப்பி அது
அறிவு என்றும் சொல்ல வாய்ப்பு உண்டு தொடரும்.


நாமரூப ஜீவ! ஜகத்தோற்றம்!
தோற்றும் வரையில், எல்லாம் ஸ்ரீபகவானுடையதே!
அவன் இயக்கமே! அவன் பொருளே!
நாம ரூப, ஜக ஜீவ, தோற்றமும்! அதன் இயக்கமும்!
அதன் மயக்கமும்! எந்த க்ஷணம் எம்மை
விட்டு விலகி, நசிக்கிறதோ, அக்ஷணமே
அவனே, ஸ்ரீபகவனே யாம்! யாமே அவன்
அதுவே யாம்! யாமே அது! இப்படி
ஸத்தியமாய், உணர்வதே, ஆத்ம ஞானம்!

(12) பார்ப்பதும் & கேட்பதும்!
அதுபற்றி பேசுவதும்!
நாமரூப! ஜக ஜீவ, தோற்றங்களையும்!
மற்றும் பொருள்களையும்! பார்க்கும் போதும்! சில
சில வார்த்தைகளை, கேட்கும் போதும்! அவைகளின்
வினையையும்! அவ்வினையின்படி, ஆட்டிவைக்கும்
விதியையும் உணராமல், அதாவது, உணர
முடியாமல்.



**மனம்** என்றால் (41)
இயக்கம் உண்டு என்றும்.
இருப்பு இல்லை என்றும்.
சொல்லும் காரணம் அது
மனம் எதாவது ஓர்
நாமரூபத்தை பற்றிக் கொண்
இருக்க முடியுமே தவிர
தனியே இருப்பு இல்லை.
இருக்கவும் இயலாது. அது
மனமானது தோஷ ஆரம்பாட்ட குணசொரூபம்
மனதின் நம்ம முயற்சி வேண்டும். தொடரும்.

அதாவது, ஆத்திரம்! அவசரம்! வேகம்! இவை களினால், உந்தப்பட்டு; **விருப்பத்தை யும் & அருவருப்பையும்!** தோஷமான குணங்களினால், ஆட்படுத்தப்பட்டு; நம் வாக்காலும், அதைச் சார்ந்த, செயலாலும்! ஓர் காரியம், செய்து விடுகிறோம். அது சமயம்! ஆத்திரம் அறிவு நாசம்! என்பதை, வேகத்தின் காரணமாக, மறக்க நேரிடுகிறது. இந்த வேகத்தினால், **கொடுக்கல் & வாங்கலோ! போக்கு & வரவோ!** மாற்றம் அடைகிறது இதனால் சின்னசின்ன ஆசையும் **பேராசையாக!** மாற வாய்ப்பு உண்டு. சிறு சிறு, கோப தாபங்களும்; **விரோத, குரோதமாக!** மாறும் நிலை, இயல்பாக அமைந்து விடுகிறது. இதில் நம்முடைய, வினையும் விதியும்! எதிராளியின், வினையும் விதியும், எப்படி பின்னவிடுகிறதென, அறிய முடியாமல், உன் ஆத்திரமும், வேகமும், மறைந்து விடுகிறது. முடிவில், தான் ஓர் அன்பர் வாசகம், ஞாபகம் வரும். அதாவது, நாவும் நடந்து முடிந்தபின்தான்! நல்லது கெட்டது, தெரியுமடா!! என்ற நிலையில், உன்மனம்





கோடி முறைகளும் வேண்டும். மனம் ஓர் எழுச்சியினாலேயே எழுந்து ஆர்ப்பாட்டம் செய்யும். அறிவு பிரகாசித்து விட்டால் மனமும்! அதன் எழுச்சியும்! அதன் ஆர்ப்பாட்டமும்! (42)

நடமாற்றத்தின், விளைவுகளை எண்ணி, வருந்துவம். அது சமயம், நடந்த சம்பவ வார்த்தைகள், எல்லாம் புல்லில் சிதறிய தானியம் தானே? அவைகளை, பொறுக்க முடியுமா? முடியாது தான். கண்கெட்ட பின், சூரிய நமஸ்காரம், செய்ய முடியுமா? முடியாது தான். இங்குதான் **கேடு** வரும் பின்னே, என்றும் **மதி** கெட்டு வரும் முன்னே, என்றும் சொல்வது பொருந்தும். ஆகவே, எம் ஆனந்த குழந்தைகளே! ஓர் காட்சியை, **பார்த்த உடனும்!** சில வார்த்தைகளை **கேட்ட உடனும்!**

ஆத்திரம்! அவசரம்! வேகம்! படபடப்பு! இவைகளை நாசம் செய்வீர்களாக. நம் மனதிற்கு, இது ஓர் **பரீட்சை** என, மெய்யாகவே உணர்வீர்களாக. எல்லாம் ஸ்ரீபகவான் செயல்! எல்லாம் ஸ்ரீபகவான் பொருள் ஸ்ரீ விதியின்படி, ஓர் நாடகம் நடக்கிறது என. உணர்க. சில வினாடிகளோ! சில நிமிடமோ! எல்லாம் நீயே, என

**உன்னுள் அடங்குவாயாக!**



உன்றைப் தான் (43)
முடிந்தது என்றும்,
நீதான் செய்தாய்
என்றும், ஓர் ஜக
ஜீவனை! சுட்டிக்
காட்டும் போது,
அங்கு ஸ்ரீபகவானை மற
ந்துவிடுகிறோம். தோஷம்
தாங்கிய தூலத்தை சுட்டிக்காட்டுவதால்
வினையும் மனமும் பின்னிவிடும். தொடரும்.

எங்கும் உள்ள ஸ்ரீபகவான், உன்னையும்! உன் எதிராளியினுள்ளும், இருந்து **ரூபமா** கவும்! **ஸபமா** கவும்! அவசியம் இயங்குவான்.


முன்பு சொன்ன வாசகத்தை கூர்ந்து உணரவும்.

**நாளும் நடந்துமுடிந்தபின்!**

என்றால்:- இருவர் பேசும் வார்த்தைகளையே, கொடுக்கல்! வாங்கல்! என இரண்டாக சொன்னார். அவ்விருவரும் **காரசார** வார்த்தைகளால், பரிமாற்றம் பண்ணும் போது நடைபெறும், வினையின், அசம்பாவித நிகழ்ச்சிகளை! **போக்கு வரவு!** என இரண்டாக குறிப்பிடுகிறார்.

கொடுக்கல், வாங்கலும் & போக்கு வரவும்! தான் நாளும் நடந்து, முடிந்தபின் என்றார். இவ்விரண்டும், **நான், எனது** என்ற அகங்கார அபிமானவாக்காக நடைபெறுகிறதென்றும் **என்னைஉன்னைப்!** என்ற, போட்டி பொறாமையால், நடைபெறும் **நிகழ்ச்சியின்** சம்பவங்களாகவும், நடந்து முடிந்தபின்பு, அங்கு என்ன மிஞ்சும்?






தோன்றாத்துணையான
ஸ்ரீபகவானே இவ்
வடிவில் வந்தான்
என உ ரீ (44)
இருப்பை உணர்ந்து
உன்னைத்தான் முழுந்து
நீதான் செய்தாய் என
உள்ளக் களிப்புடன்
எண்ணமும் செய்தாலும்
அப்பொழுது ஸ்ரீபகவானையே சேரும். அங்கேபக்த
பயம் வேண்டாம். உன்நம்பிக்கையே பலன் தரும்.
முடிந்தது.

எரிந்த பெட்டிச் சாம்பல் தான் மிஞ்சும். என்ற நிலையாகிவிடும். ஆகவே, உங்கள் வாக்கிலும்! செய்கையிலும்! கவனம் தேவை. ஆகவே, முன் கூறிய நிலையில், சர்வார்ப்பணமும்! பின் உன் அனுபவ நிலையில் பிரம்மார்ப்பணமும்! அவசியம் உன்னை ரக்ஷிக்கும். ஆகவே நாமரூப, ஜகஜீவ, சொரூபங்களை, காணும் போதும்! பேசும் போதும்! எல்லாம் மண்ணே! எல்லாம் மண்ணே! எல்லாம் மண்ணே! எல்லாம் நவமே! எல்லாம் நவமே! எல்லாம் நவமே! அதுவே நாம்! நாமே அது! என உணர்ந்து நீ அதுவாகவே இருப்பாய். இதுவே ஆத்ம ஞானம்!

(13) நாமரூப தோற்றம்! அதனால், சொந்தமும்! அதனால் பந்தமும்! அதனால் பாசமும்! அதனால் பற்றும்! அதனால் புண்ணிய பாப, விதியும்! அதனால் ஜனன மரணமும்! உண்டாகும் என, ஸ்ரீமஹான்களின் அனுபவம் இருக்கிறது.








நாமா என்றும் ஓர் தோற்றம் மட்டும் உண்டு. அத்தோற்றத்தால் எப்பிரயோஜனமும் இல்லை. அத்தோற்றமானது பிரயோஜனப்படும் நிலையில் ஓர் தோற்றத்தை உண்டாக்கும்போது தான் அங்கு உருவம் உண்டாகிறது அங்கு நாமமும் உண்டு! உருவமும் உண்டு. அதனால் பிரயோஜனம் என்றும் ஓர் குணமும் உண்டு.

(A) தோற்றம்:- எல்லாம் மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே! அப்பரத்தின் நிழலே, மாயா என்ற, **ஜலம்!** அங்கு மண்ணிற்கும்! ஜலத்திற்கும்! **கலந்தனையே! நாமா** (பெயர்) மட்டும் உண்டு! உருவம் இல்லவே இல்லை. இவ்விரண்டும், ஒன்றாக இணைந்து பிணையும்போது, **களிமண்!** என, ஆகிக் கொண்டதும் இங்கும் களிமண் என்ற, நாமாவே தவிர, உருவம் இல்லை. ஆனால், உருவம் உண்டாக்கத்தக்க ஓர், **பொருள்!** ஆகிவிட்டது. எனமட்டும் கொள்ளலாம். பரம் பொருளானது, இயக்கத்திற்காக, **தானே** மஹேசன் என்ற நிலையில், **மஹத்** சிருஷ்டியாக, கோடானுகோடி கோள்களையும்! கோடானுகோடி, சூரிய சந்திராதிகளையும் (நக்ஷத்திரங்களையும்) அவற்றின் இயக்க, **பஞ்சபூதங்களையும்!** உண்டாக்கியது. எனஞானிகள் சொல்வர். இவை அனைத்தும், பெயருடன் (நாமாவுடன்) கூடிய ஓர் **பொருளே,** தவிர, **உருவம்** இல்லை என்பதே,



ஓர் தோற்றமென (46)
இருந்தால், அது ஓர்
பிரயோஜனம் பலம்
பொருள் ஆனால்,
அது நாமரூபம்!
எனக்குறு. ஓர் பொருளாக
இருந்தால், அது ஓர் வஸ்து
என்றும், ஓர் பொருள் என்றும் சொல்வாம்
அது நாமரூபம் ஆகாது. தோடம்.
ஏன் இவைகளை, பொருள் என்பதும்
சத்தியமாகும். ஏன் இவைகளை, பொருள் என்றும், சொல்கிறோம் என்றால்.
உருவம் இல்லை என்றும், சொல்கிறோம் என்றால்.
இங்கு உருவம் ஒன்று, கொண்டாடி, விளையாடும்
மனம்! இவ்வாறே, காரணம் ஆகும். அம்
பரம் பொருளாகிய, மகேசனும், தம் அம்ஸ
திரிகர்த்தாக்களினால், நாமரூப ஜகத்
தோற்றமும், (மனத்தே ஜகத்தாக மாறியது) தாவர
வர்க்கங்களையும்! அனைத்து ஜீவகோடிகளை
தோற்றங்களையும் உண்டாக்கி, ண்!
அவை அனைத்திலும், தாம் நிறைந்தான்
தம் அம்ஸ, மனித இனத்தையும் உண்டாக்கி, அதற்குமேலும்
இருக்கவும்! இயங்கவும்! செய்கிறான்.
இருக்கும் நிலையில் ஸ்ரீ பகவானாகவும்! அங்கு
இயங்கும் நிலையில், தம் மாயாஸ்ரீனி
சேர்ந்ததாகிய, மனமாகவும் இருக்கிறான்
இங்கு ஸ்ரீபகவானுக்கு, அவன் நாமம்! என்ற ஓர்
இருப்புத்தான் உண்டேதவிர, உருவ இருப்பு இல்லை
என்பதே, சத்தியம்.



அந்தவஸ்துவாகிய, பொருள் பிரயோஜனப்படும் ஓர் (47) **ஞானத்தை** நாடிய மறுபடியும், அது நாமரூபம் என பேசப்படும். அது போல ரூபமும் செய்யும். என ஸ்ரீ மஹான்கள் சொல்வர். பிரயோஜனம் என்ற, ஞானம் இல்லையாயின், அது ஓர் பொருளாகிய, தோற்றமே முடிந்தது.

அவன் நாமமாகவும், ஒலி வடிவமாகவும், அதி சூட்சுமமாகவும் இருப்பதால், அவன் இருப்பை **அறிவால்** உணர முடியுமே தவிர (மனக்கண் கொண்டு) **மனதால்** காண முடியாது, என்பதும் சத்தியமே.

முன் கூறிய, நாம ரூப, ஜக ஜீவ, தோற்றங்களும், அவைகளின், இருப்பும் இயக்கமும், கொண்ட பஞ்சபூதங்களும், **அறிவு** (ஸ்ரீபகவன்) சொரூபமாக, இருப்பதால், அவை அனைத்தும், **இருந்தும் இல்லாததேயாகும்**. காரணம், **காரசாரமான (குணதோஷ)** மனம் இல்லாததே காரணமாகும்.

இதனை ஓர் உண்மை, எப்படி விளங்குகிறது என்றால்? நாம ரூப, ஜக ஜீவ, தோற்றமும், தாவர வர்க்கங்களும் அனைத்து **தோற்றங்களும், மனம்** இல்லையானால், தோற்றமும் இல்லை. இயக்கமும் இல்லை. அவைகள் இருந்தும், இயக்க பிரயோஜனம் இல்லாத, தன்மையால் **எல்லாம் இல்லை** என்றே சொல்லலாம், என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.



நாமரூபம் என, (48)
ஆக்ருபருக, அந்த
மனமே! நாமமும்,
ரூபமும், ஒன்று சேர
வில்லையானால், அதும
மனம், தம் குணங்கிற
வைத்து, விளையாட
முடியாது. அதாவது ரூபம்
ஜடம் என தொண்டு
குணம் எனக்கொண்டு பருகிறது.
பருகிறது. நாமம்
தொடர்கிறது.

**அறிவு** இருக்கும்! ஆனால் இயங்காது!
**மனம்** இயங்கும்! ஆனால் இருக்காது!!
ஏன் இம்மனதை, இல்லையென்று சொல்கிறோம் என்றால்,
மனம் என்றால் **நாமரூபங்கள்**! தோற்றம்
பண்ணவும்! அவைகளில் **எண்ணங்களை**
வடிவமாகத்தான் (சூட்சுமமாக) இருக்கவும்! இயங்
கவும்! முடியும். அம்மனதிற்கு **தனியே**
இருப்பும்! இயக்கமும்! இல்லை என்பதே ஸத்தியம்.
ஆகவே இங்கு கூறிய தோற்றம் என்றால் மனமே தவிர,
மற்றொன்றல்ல. 'இத்தோற்றத்தில் நாமமும்! ரூபமும்! பொருந்தும்.

(B) சொந்தம்:— **மனம்** இருந்தால் மட்டுமே,
நாமரூப, ஜீவகோடிகளும்! தாவர வர்க்கங்களும்,
இருக்கிறது, என சொல்லவும் முடியும்! அவை இயங்
குகிறது என, சொல்லவும் முடியும்! அதனால் இன்பமும்
துன்பமும், தோன்றுகிற தென, அனுபவமும்! அந்த
அனுபவத்தை, பாக்காவோ! வரியாவோ! விளக்க
வும் முடியும். மனம் இல்லையானால், மேலே கூறிய அனைத்
தும், **தோன்ற** முடியாது. அப்படி இருந்தாலும்,



ரூபமாகிய ஜடமும்! நாமமாகிய ஒலியும்! இவ்விரண்டாலும், இந்த மனதால், நாமரூபங்களை சம்பந்த **தோஷங்களால்!** விளையாட முடியும். இவ்வுயிரால் விளையாட முடியாது. அவ்வுயிர் இவ்வுலகம் இருந்தும் இல்லாததே யாகும். முடிந்தது. (49)

**அவைகள்** இருந்தும் இல்லாததே! இல்லாததே என்றால், **மாயை** இருக்கும்.

அப்படி இருந்தால், அவை உபயோகமும்! உபயோகிப்பவனும்! இல்லாத தன்மையால், இல்லை என்றே சொல்லலாம். இந்த அவைகளை, தாம் விளையாடுவதற்காகவே, மனமானது, **நாமரூபமாக!** அனைத்து பொருள்களையும், பாத்திர பண்ட பதார்த்த பாண்டங்களையும் உண்டுபண்ணி, அத்தோற்றங்களை, **எனது, உனது!** என சொந்தம் கொண்டாடி விளையாடியது.

பந்தம் :— நாமரூபங்களை, எனக்கு! உனக்கு! என சொந்தம் கொண்டாடும்போது, அப்பொருள்களின் நாமரூபமும், **இருப்பும்** வடிவுடைமை குணங்கள் உண்டாகிறது. அதனை **தோஷ பந்தம்** என்றதனை (ஹவங்கு) பின்னிவிடுகிறது.

இப்பந்தம் பின்னிவிடும்போது, உறவு! சுற்றம்! நட்பு! என்ற கிளைகள் **நான்! நீ!** என, இம்மனதை



(50)

எனது என்ற உடைமையும்,
இது என்னுடையது
ஓர் வெறித்தனமான
உரிமையும்! இவைகளே
பாசம்(பற்று! எனக்
கொள்ளலாம். இவை
புண்ணிய பாபத்தையும்,
ஜனன மரண பிணைப்
பினையும், எந்த ஜென்மமும்
இன்றி, பின்னவிட்டுக் கொள்கிறது. இதுவே அஞ்ஞானம்
ஆகும்.

பின்னிப் பிணைகிறது. இது மேலும் மேலும்

**வலுவடைகிறது**| வலுவடைகிறது

என்றும், தோஷ குணங்கள், வலுப் பெறுகிறது!
எனப் பொருள் கொள்ளல் வேண்டும்.


(D) <u>பாசம் & பற்று!</u> :— பாசமும்(பற்றும்) ஒன்றே.
எப்படி என்றால், தேவையும் & ஆசையும்! எப்படி
ஒன்றில்லாமல் ஒன்றில்லையோ! அதே நிலையில்,
பாசமும்(பற்றும்! ஒன்றில்லாமல் ஒன்றில்லை!
என்றே சொல்ல வேண்டும். இந்த பாசம் & பற்று
என்பது, **இது என்னுடையது**| இதை

**உனக்கு** தரமாட்டேன். என்ற வக்ர குண

மாகமாறி, **உடைமை**யும்! அவ்வுடைமையால்,

ஓர் வெறியான **உரிமை**யும்)பின்னிக்

கொள்கிறது. இதைப் லோபம்! விரோதம்! குரோதம்!
வேஷம்! மோஹம்! கோபாவேசம்! எனபல விரோத,
தோஷ குணங்கள், இம்மனதில், ஒட்டி கலந்துவிடுகிறது.
இனி இவைகளை, தனியே பிரிக்க முடியாது.
பிரிக்க இயலாது.



நான், எனது, என்றவ்! (51)
எனதான கருமம்
செய்வதால் அவன்
செய்யும் பொருள்
நன்மைக்கு பயன்பட
பாவ புண்ணியமும்,
தீமைக்கு பயன்பட்டால்
பாவமும் அச்சீவன்
அடைகிறது. அப்பொழுது
அவனே வலுவில் அஹங்காரத்தை
அஹங்காரத்தால் செய்வதால் அவ்வினை அடைகிறது.
இதற்கு இச்சீவனே பொறுப்பு! ஸ்ரீபகவான் பொறுப்பல்ல.

**(E) புண்ணிய பாவ வினை:**— முன்கூறிய நிலையில், பாசம் பற்றினால், கோர குணங்கள், கலந்து நிறைந்தாலும், அவை **கருமை** என்ற, பரோபகார நிலையில், **தானதருமம்** நிலையில், பிறருக்கு, பகிர்ந்து கொடுக்கப்பட்டால், அவை, **நல்** கண்டு, **பொருள்** கண்டு, புண்ணிய பாவமாக வடிவெடுக்கிறது.

**(F) ஜனன மரணம்:**— இப்புண்ணிய பாவங்கள்,

**மேலே:**— சொர்க்கம், நரகம், என பிரிக்கப்படுகிறது.

**கீழே:**— உயர்ந்த பிறவி, தாழ்ந்த பிறவி, என பிரிக்கப்படுகிறது.

மேலும் இச்ஜனனமரணமானது, மனித இனம் தவிர, நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன, மற்றும் தாவர ஜங்கமங்களும், உண்டு என, ஸ்ரீமஹான்கள் சொல்வர். இதில் சொன்ன **ஆறு** நிலைகளும், உங்களுக்குத், (ABCDEF) தேவை இல்லாதாகும் ஆனாலும்?




ஸ்ரீபகவான் நாமாவை சொல்லி, எல்லாம் நீயே! உனதே! உன்னுவே! எனச் சரண் செய்தால், அங்கு ஸ்ரீபகவான், ஒருபொருடு பையும், ஏற்றுக்கொள் ளும். ஒன்றே ஆகவேண்டும் இப்படி சர்வார்ப்பணமாக, செய்பவனுக்கு, புண்ணியம் பாபம் இவ்விரண்டும் இல்லை. அங்கு அவன் கருத்தாகர்மம் சாத்தியமாகும். அதனால் அவனுக்கு ஜீவன் முக்தி, அவசியம் உண்டு.



முடிவை மட்டும் ஏற்றுக் கொள்ளவும். இல்லாதிய, நாமரூப தோற்றமும், அதனால் வினையும், சொந்தம், பந்தம், பாசபற்றும், வினையும், ஜனனமரணமும், துயர் உண்டாகிறது என உணர்ந்தால், மாயா மனமே, காரணம் என உணர முடிகிறது. இதன் உண்மை ?

தோற்றம் (எதுவானாலும்) என்றால் மாயா, அதை எனது, உனது, என பாவிப்பது மனம்! இப்பொய்பாவனையை, இம்மனமானது நாசம் செய்து எல்லாம் நீயே, எல்லாம் உனதே, எல்லாம் உன்னுவே, என சர்வார்ப்பணம் ஆக்கினால், நாமரூப தோற்றங்கள் நாசம் செய்து, அதனால் வினையை நாசம் செய்து. எல்லாம் மண்ணே, மண்ணாகிய பரமே, பரமாகிய நாமே, நாமாகிய பரமே, என்ற, மெய்யுணர்வால் எல்லாம் ஒன்றே, அது சிவமே, அது யாமே, யாமே அது, என்ற பிரம்மார்ப்பணத்தால் மாயா மனதை நாசம் செய்து (மனதை மறைந்தாக்கி) ஜீவன் முக்தி பெறுவீராக.



நாம ரூப தோற்ற (53)
கற்பனையும் அதைச்
சார்ந்த குண தோஷ
ங்களும் தான் இம்
**மாயமனதின்**
இருப்பும்! இயக்கமும்!
ஆகும். எல்லாம் மண்ணே
என உண்மையாக உணர்ந்து
விட்டால் நாம ரூப தோற்றங்கள்
இல்லை. அலைகள் உண்டாக்கிய மன மூலம் இல்லை
அங்கு இருப்பது ஒன்றே! நடப்பது நவமே இதுவேதான்.

நன்றாக இதை கவனி!

நாம ரூப, ஜக ஜீவ, தோற்றங்களுக்கும் இந்த
**மனமே காரணம்!**
சொந்த பந்த பாச, படுகுழிக்கும் இந்த
**மனமே காரணம்!**
எனது உனது என, போட்டி பொறாமைக்கும் இந்த
**மனமே காரணம்!**
காம, மோஹ, போக, வெறியாட்டத்திற்கும் இந்த
**மனமே காரணம்!**
எல்லாம் அவனே! அவன் பொருளே! அவன் செயலே! இதற்கும்
**மனமே காரணம்!** இந்த
சர்வார்ப்பணத்தால், உண்மையே, அறிவாகி விடுகிறது. இங்கு,
இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என்றறிவாய்,
எல்லாம் ஒன்றே! அதுசிவமே! அதுயாமே! யாமே அது!
என்றறிவில், மனம் **அறிவாகி!** அந்த அறிவே,
**பேறாகி** விட்டால்! நீவந்த காரியம் முடிந்து
விட்டது என உணர்.
அனைத்தும் ஒன்றே! அது சிவமே!
**பாபா.**
அது யாமே! யாமே அது! அதுவே நீங்கள்! இதுவே சத்யம்!



ஸத்திய வாக்கை தர்மம் செய்! (௫௪) என்பது. ஸத்குரு வாக்கால் உணரும் ஸத்தியத்தை! நாம் உணர்ந்து அனுபவிக்கும் போது சிவபக்தே ஆன்மாவுக்காக உன் வாக்கில் எந்த முயற்சியும் இல்லாமல், அந்த ஒன்றே வெளிப்படுத்தும் என்று சொல்லத்தேவைட... தொடரும்

தானதருமம்! எனச் சொல்வது:- **நம்ப** பொருளையும்! உணவையும்! கொடுப்பது என்றால், அவை **கர்ம** சம்பந்தம் இருந்தால் மட்டும், நடைபெறும், ஓர் நிகழ்ச்சியாகும். உனக்கும், அவனுக்கு, கொடுக்கும் பிராப்தியும், இருக்க வேண்டும். அவனுக்கும், உன்னிடம், வாங்கும் பிராப்தியும், இருக்கவேண்டும். ஆகவே, முன்னே கூறிய, சர்வார்ப்பண நிலையில், **ஸ்ரீபகவத்** உணர்வோடு நீ இருக்கும் போது, அங்கு **உன் பற்றுவரவு!** கணக்கு முடியுமே தவிர, தொடராது. காரணம், அங்கு ஸ்ரீபகவான், உன் பாவ கணக்கு பொறுப்பு முழுவதையும், அவனே ஏற்றுக் கொள்கிறான். அங்கு **சாட்சியாக** இருக்கும், ஸ்ரீபகவான், உன் பாவ காரியங்களையும், அதன் இயக்கங்களையும், அவன் **மாயையில்!** கவனித்துக் கொள்கிறான். அங்கு உன் **மனக்கணக்கை உன்!**



தானே வெளிவரும். அதை **பரகுரு** (55)
கருணை என ஸ்ரீமஹான்கள் சொல்வர். இது எல்லோருக்கும் வெளிவருவதில்லை. ஸத்குரு வாக்கிய சிரத்தையும், ஸத்குரு நம்பிக்கையும் உள்ளவர்களிடமே இது வெளிப்படும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர். இல்ல மனம் எண்ணிப் பேசினால் தோஷம் ஆகும். முடிந்தது.

ஸத்குரு சந்நிதியில், அவர் உபதேசப்படி, பிரம்மார்ப்பணத்தில், முழுமையாக, **அர்ப்பணம்** செய்யும் போது, உன் கவனக் குறைவால், உன் மனதை மீறி, அனைத்து **குண** தோஷமும் நாசமாகி **மனம்** மறைந்தால் ஜீவன் முக்தி அடைவது உறுதி. இல்லை ஸ்ரீபகவான் கருணையால், உன் விதிப்படியாக வருகிற போது, அங்கு உனக்கு மனக்குழப்பம், அவஸ்யம் ஏற்படாது. மனக்குழப்பம் இல்லாத தன்மையினால், அங்கு உன் வாக்கு **ஸத்யமாய்** பிரகாசிக்கும். அது சமயம், பூர்வ புண்ணிய வசப்பட்ட ஆன்மாக்களுக்கு, உன் வாக்கு **தேவைப்படும்**. இது உன் முயற்சி இல்லை. இது **பரகுருணை** ஆகும். அந்நிலையில், உன் வாக்கை **தானமாக** பண்ணச் செய்து, சில பக்குவ ஆன்மாக்களை, கடைத்தேறச் செய்வது **பரகுரு** கருணை என்று ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம். இதை நிறைவு செய்கிறோம். இத்துடன் எல்லாம் ஒன்றே அது சிவமே! **பாபா.**
அதுயாவும் ~~பாகமே அது இது~~




Abode of Love

You Are Everything!